**செய்தி வெளியீடு எண் : 1336** **நாள் : 05.08.2022**

## இன்று (05.08.2022), சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உணவு பதப்படுத்தும் துறையில் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அண்ணன் **திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** அவர்களே,

வேளாண்மைப் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அரசு செயலாளர் **திரு. சி. சமயமூர்த்தி இ.ஆ.ப.** அவர்களே,

சி.ஐ.ஐ தென் மண்டலத்தின் தலைவர் **திரு. சுசித்ராகே. இலா** அவர்களே,

சி.ஐ.ஐ. தமிழ்நாடு மாநில கவுன்சிலின் தலைவர் **திரு. சத்யகம் ஆர்யா** அவர்களே,

சி.ஐ.ஐ. தென் மண்டலத்திற்கான வேளாண்மை, உணவுப் பதப்படுத்துதல் மற்றும் கால்நடை வளர்ப்புதுணைக் குழுவின் தலைவர் **திரு. எஸ். சந்திரமோகன்** அவர்களே,

ஃபுட்ப்ரோ 2022 - இன் தலைவர் **திரு. பி. தியாகராஜன்** அவர்களே,

தொழில் துறை உறுப்பினர்களே,

ஊடக நண்பர்களே,

பெரியோர்களே தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான காலை வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.ஐ.ஐ. ஏற்பாடு செய்துள்ள **ஃபுட்ப்ரோ 2022** - இல் நேரில் பங்கேற்க முடியாவிட்டாலும் காணொளி வாயிலாக உங்களுடன் உரையாடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நேற்று திருவாரூரிலே இருந்து சென்னை திரும்பும் வழியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலைபேசியிலே அழைத்து இரண்டு நாள்கள் திருவாரூரிலே தங்கி எதிர்பாராத கடும் மழை காரணமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேரிலிருந்து தக்கன செய்திடக் கூறினார். அதன் காரணமாக நான் இந்த நிகழ்வில் உங்களுடன் நவீனத் தொழில்நுட்பத்தின் காரணமாக தஞ்சாவூரிலிருந்து கொண்டே பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு என்று திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். பசியைப் போக்கி நோயும் பகையும் வராமல் பாதுகாப்பதில் உணவுக்குத் தான் முதலிடம்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று பழமொழி உண்டு. அப்படிப்பட்ட பசியைப் போக்க தமிழ்நாடு அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் மட்டுமல்லாது துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமோலின், ஆட்டா மாவு ஆகியவற்றையும் சேர்த்து வழங்கினார். பள்ளிக்குழந்தைகளுக்குச் சத்துணவில் முட்டையையும் சேர்த்து வழங்கினார். இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கவும் வழிவகை செய்துள்ளார்.

இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாட்டில் ஏழ்மை மிகவும் குறைந்து கல்வி வளர்ந்து உலகமெங்கும் தமிழர்கள் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றுமளவிற்கு உயர்வு ஏற்பட்டுள்ளது.

உலகின் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரிப்பதால் அதற்கேற்றவாறு வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உற்பத்தியாகும் பொருள்களைச் சேதமில்லாமல் பாதுகாப்பதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

பசியைக் கிட்டத்தட்ட முடிவுக்கு கொண்டு வந்துவிட்டோம். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்த நாம் ஊட்டச்சத்தான உணவை வழங்குவதை நோக்கி விரைந்து முன்னேற வேண்டும்.

கொரோனா நிவாரணமாக தமிழக அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4000 ரொக்க உதவியை வழங்கியதுடன், 14 ஊட்டச்சத்துப் பொருட்கள் உள்ள மளிகைப் பொருள் தொகுப்பையும் வழங்கியுள்ளது. பொங்கலுக்கு 21 வகையான பொருள்களையும் வழங்கியது.

மாநிலத்தின் பொது விநியோக முறை ''அனைத்தையும் கணினிமயமாக்குதல்'' திட்டத்தின் கீழ் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ரேஷன் கடையில் செய்யப்படும் அனைத்து பரிவர்த்தனைகளும் தானாகவே பதிவாகிறது. உணவு தானியங்களின் கையிருப்பும், அவை எங்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பதும் நிகழ்நேரத்தில் கண்காணிக்கப்படுகிறது. இதன் மூலமாக வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுவதோடு, துறையின் மூலமாக பொது மக்களுக்கு சேவைகள் எளிதாகச் சென்றடைகிறது.

நுகர்வோர் நலனை உறுதி செய்வதும் இந்த அரசு அக்கறை செலுத்தும் ஒரு விஷயமாகும். சமீப காலமாக நுகர்வோர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு அதிகரித்தாலும் கூட, தற்போதைய சந்தைப்படுத்தும் முறைகளில் ஏற்பட்டு வருகின்ற புதிய மற்றும் ஏமாற்றும் தன்மை கொண்ட போக்குகளுக்கும், நியாயமற்ற வர்த்தக முறைகளுக்கும் இணையாக விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும். சுரண்டும் தன்மை கொண்ட வர்த்தக நடைமுறைகள் குறித்து ஊடகங்கள்,

பிரசுரங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பட்டறைகள் போன்றவை மூலமாக, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

பல்வேறு வகையான வேளாண், தோட்டக்கலை, மீன் மற்றும் கால்நடைத் தயாரிப்புகளைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு சாதகமான காரணிகள் தமிழகத்தில் உள்ளது. தமிழத்தில் உள்ள முக்கிய துறைமுகங்கள், 4 சர்வதேச விமான நிலையங்கள், 2 லட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை கட்டமைப்பு, விரிவான இரயில் இணைப்பு போன்றவற்றின் வாயிலாக முக்கியமான தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக மையங்களுடன் சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 38 வேளாண் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களின் வாயிலாக உருவாக்கப்பட்ட இங்குள்ள மிகச்சிறந்த விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் திறன்களின் காரணமாக மாநிலத்தின் உணவுப் பதப்படுத்தும் துறையை விரிவுபடுத்துவதற்கான சிறந்த வாய்ப்புள்ளது.

உணவுப் பதப்படுத்தும் தொழில் வேளாண்மை மற்றும் தொழில் துறைகளுக்கு இடையே ஒரு முக்கிய தொடர்பை வழங்குகிறது. தமிழக அரசின் உணவுப் பதப்படுத்தும் கொள்கையின் நோக்கங்களை அடைவதற்கு இந்தத் தொடர்பினை பலப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். மாநிலத்தில் உணவுப் பதப்படுத்தும் துறையை ஊக்கப்படுத்தவும் அவற்றை உருவாக்கவும் சில முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அரசு அடையாளம் கண்டுள்ளது, அவை யாதெனில்:

1. அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய தொழில்நுட்பங்களை ஏற்பதற்கு குழுக்களின் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு புதுமையான முறைகளைக் கையாளுதல்.

2. உணவுப் பதப்படுத்தும் மையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தரமான உற்பத்தியைப் பெறுவதற்கு பயிர் செய்யும் முறையை மாற்றுதல் மற்றும் உயர்-தொழில்நுட்ப வேளாண் முறையைப் பின்பற்றுதல்.

3. உணவுப் பதப்படுத்தும் தொழில்துறையை ஊக்குவிக்க கட்டமைப்பு வசதிகளை வேகமாக உருவாக்குதல்.

4. உணவுப் பதப்படுத்தும் தொழில்துறையின் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய சட்டப்பூர்வ தடைகளை அகற்றுதல் மேலும் உணவு பதப்படுத்துதலை ஊக்கப்படுத்த புதிய முறைகளை அறிமுகப்படுத்துதல்.

5. இந்த தொழில்துறையில் உள்ள அதிக அபாயம் மற்றும் அதிக-முதலீட்டுத் தேவை ஆகியவற்றை மனதில் கொண்டு, தொழில் முனைவோருக்கு நிதி உதவிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

6. வேளாண்மை, தோட்டக்கலை, பூ உற்பத்தி, மீன் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்புப் பணிகள் போன்ற தொடர்புடைய துறைகளைப் பொறுத்தவரை ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையைப் பயன்படுத்துதல்.

வேளாண் தயாரிப்பு பதப்படுத்தும் பிரிவில் தமிழகம் முன்னணியில் உள்ளது மேலும் சிறு மற்றும் குறு நிறுவனங்கள் என்று பதிவு செய்துள்ள 24,000 உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களும், 1,100 நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களும் உள்ளன. நமது மாநிலம் இந்தியாவின் உணவு பதப்படுத்தும் அளவில் ஏறக்குறைய 7% அளவுக்கு பங்களிப்பினை வழங்குகிறது. எல்லையற்ற வேளாண் வளங்கள், வளர்ந்து வரும் தேவை மற்றும் தேசிய மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றில் நமது மாநிலத்திற்கு ஒப்பீட்டு அளவில் உள்ள சாதகமான சூழ்நிலைதான் இத்தகைய வளர்ச்சியை சாத்தியமாக்கியுள்ளது.

நமது மாநிலம் ஏறக்குறைய 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களையும், 140 லட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் காய்கறிகளையும் உற்பத்தி செய்கிறது, இதன் மூலம் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியில் 3 சதவிகிதத்தையும், காய்கறி உற்பத்தியில் 7 சதவிகிதத்தையும், பழ உற்பத்தியில் 12 சதவிகிதத்தையும்தனது பங்களிப்பாக வழங்குகிறது.

தமிழகம் கடல் உணவுகள், அரிசி, தானியப் பொருட்கள், பால் தயாரிப்புகள் போன்ற பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புகளின் ஒரு முன்னணி ஏற்றுமதியாளராக திகழ்கிறது.

தமிழகத்திற்கு உள்ள உற்பத்தி ஆற்றல், ஆழமான தொழில்துறை கலாச்சாரம், திறன்மிக்க மக்கள், சாதகமான வேளாண்மை-பருவநிலை மற்றும் தலைசிறந்த போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றையும், மாநிலத்தில் உள்ள வளமிக்க பல்வகைப்பட்ட உணவுத் தயாரிப்பு மையங்களையும் பயன்படுத்தி தமிழகத்தை இந்தியாவிலேயே ஒரு முன்னணி உணவு பதப்படுத்தும் மையமாக மாற்றி இந்த துறைக்கு ஊக்கம் அளிப்பதுதான் தமிழகத்தின் உணவுப் பதப்படுத்தும் கொள்கையின் தொலைநோக்காகும்.

இந்த ஒரு சிலவார்த்தைகளுடன் ஃபுட்ப்ரோ 2022 நிகழ்வு சிறந்த வெற்றி பெறுவதற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in